1973 நவம்பர் 28]

Schemes under International Development Agency

*472 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state:

(a) whether some of the rules imposed by the Reserve Bank under International Development Association scheme have been relaxed; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) தமிழ் நாட்டில் செயல்பட்டுவரும் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத் திட்டங்களுக்குரிய விதிகள் எல்லாவற்றையும் இந்திய ரிசர்வ் வங்கி வெளியிடவில்லை. மேலும், அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவன உதவியைப் பெறுகின்ற வேளாண்மைத் திட்டங்களுக்கும் இந்திய ரிசர்வ் வங்கிக்கும் தொடர்பு எதுவும் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் நாம் கடன்களைக் கொடுக்கிற நேரத்தில் வசதி உடைய நிலச் சுவாந்தார்கள் கிணறுகள் வெட்டிவிடுகிறார்கள். ஏழை விவசாயி களினால்தான் 600 அடிக்குக் கீழே கிணறுகள் வெட்ட முடியவில்லை. ஆகவே, இந்த விதிகளைத் தளர்த்தி நிலவள வங்கி மூலமாக அவர் களுக்குக் கடன் வழங்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: ஏழை விவசாயி களுக்கு உதவி செய்வதற்காகத்தான் இந்தத் திட்டம். ஏழை விவசாயிகள் செய்கிற முதலீடு வீணாகிவிடாது, கிணற்றில் தண்ணீர் கிடைத்து, அவர்கள் சாகுபடி செய்து பயன் அடைய வேண்டும் என்பதற்காகவேதான் சில விதிமுறைகளை வைத்திருக் கிறார்கள். ஒரு கிணற்றுக்கும், இன்னொரு கிணற்றுக்கும் இடையில் இருக்கவேண்டிய தூரத்தில் 20 சதவீதம் குறைத்துக் கொள்ளக்கூட உலக வங்கி ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் ஆகவே, 20 சதவீ வெட்டிக் கொடுத்து அதை நல்லமுறையில் அமல்படுத்த முடியும்.